DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SUB COURT, USILAMPATTI.

| | |
|---|---|
| Miscellaneous case No: | : S.C.No.10/2022 |
| Preliminary Register | : |
| Sessions | : |
| Deposition of witness of | : P.W.2 |
| Name | :பாண்டியம்மாள் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.08.2023

-----

(எதிரி ஆஜர்)

**முதல் விசாரணை:**

நான் என் தாயார் வீட்டில் வருசநாட்டில் குடியிருக்கிறேன். ஆஜர் எதிரியை தெரியும். எங்களுக்கும், எதிரிக்கும் குடுக்கல் வாங்கல் பிரச்சனை இருந்தது. கடந்த 25.04.2021ம் தேதி கரையாம்பட்டியில் வீடு கட்டியதற்கு தண்ணீர் ஊற்றும் போது பிரச்சனை ஏற்பட்டு அப்போது நான் சத்தம் கேட்டு போனேன் சண்டை முடிந்து இருந்தது. சாட்சி 1 சமயராஜ்க்கு உடம்பில் காயம் இருந்தது. அவரை இருசக்கர வாகனத்தில் மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றார்கள். ஆஜர் எதிரி சாட்சி 1-யை கம்பால் அடித்து காயப்படுத்தியதாக கேள்விபட்டேன்.

போலிசார் என்னை விசாரித்தார்கள். போலிசார் விசாரணையின் போது தற்போது சாட்சியம் அளித்தது போல் தான் சொல்லியுள்ளேன்.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளிக்கப்பட்டு அரசு தரப்பு குறுக்கு விசாரணை)**

கடந்த 25.04.2021ம் தேதி காலை சுமார் 10.30 மணியளவில் பேரையூர் ரோட்டில் உள்ள சமத்துவபுரம் இருசக்கர வாகன ஓர்க் ஷாப் அருகில் எனது கணவரும், எனது கணவர் மருமகன் தங்கமலை, பிரபு, கருப்புச்சாமி ஆகியோர்கள் நின்று பேசிக்கொண்டிருந்த போது சிலைராஜா கையில் அருவாளுடன் வந்து நீ உயிருடன் இருந்தால் தான் உன் பொண்டாட்டி என்கிட்ட பேசமாட்டேங்குற என்று சொல்லிக்கொண்டு இதோடு செத்து தொலைந்து போடா என்று கொலை வெறியுடன் எனது கணவரின் கழுத்தை பார்த்து வெட்ட வந்த போது எனது கணவர் இடது கையில் தடுத்ததாகவும் அப்போது இடது மணிக்கட்டில் இரத்தக் காயம் ஏற்பட்டதாகவும் அதே அருவாளால் மாறி மாறி வெட்டியதால் இடது கை மற்றும் ஒரு வெட்டும், மூக்கின் அருகே வெட்டும் ஏற்பட்டு இரத்தக்காயம் ஏற்பட்டதாகவும் அருகில் இருந்த என் மகன், என் மருமகன், அவரது தம்பி பரத், பார்த்தீபன் ஆகியோர் ஓடி வந்து சத்தம் போட்ட போது அருவாளுடன் வடக்கு பக்கம் ஓடி விட்டார் என்றும் அந்த வழியில் வந்த போக்கு வண்டியில் உசிலம்பட்டி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக

சேர்த்தோம் பின்பு மேல்சிகிச்சைக்காக மதுரை இராஜாஜி மருத்துவமனையில் சேர்த்தோம் என்றும் போலிசார் விசாரணையின் போது சொல்லிவிட்ட தற்போது சம்பவத்தை கேள்விபட்டதாக எதிரியை காப்பாற்றும் நோக்கோடு பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை: இல்லை.</u>**

/*sd*/Thiru.P.S.ரஸ்கின் ராஜ்,10.8.2023

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.

/உண்மை நகல்/

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.